005

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித் துறை

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை - 2022

**SNP8336/ESP2136 – விசேட தேவைகள்சார் கல்வியில் தற்கால செல்நெறிகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 11.09.2022 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

**பகுதி - I இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

## பகுதி I

1. உறுப்புரிமை-26 இல் மனித உரிமைகள் உலகளாவிய பிரகடனத்தால் வரையறுக்கப்பட்ட கல்வியின் வகிபங்கைக் குறிப்பிடுக.
2. விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட மாணவர்களின் சமூக இயக்கத்திற்கான கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குக.
3. “கற்றல் வாழ்நாள் முழுவதும் நடைபெறுவதால், கல்வி வெவ்வேறு சூழல்களில் நடைபெறுகிறது” ஒரு பிள்ளையின் வாழ்நாளில் நடைபெறும் **மூன்று (03)** வகையான கல்வி முறைமையைக் கூறுக.
4. வாழ்நாள் கல்வி என்ற சொல்லைப் பற்றிய உங்கள் புரிதலைக் குறிப்பிடவும் மற்றும் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு அதன் முக்கியத்துவத்திற்கான **மூன்று (03)** காரணங்களைக் குறிப்பிடுக.
5. விசேட பாடசாலைகளை நிறுவுவதன் **இரண்டு (02)** நோக்கங்களைக் விளக்குக.
6. இலங்கைக் கல்விச் சூழலில் இயலாமை பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கும் **மூன்று (03)** கல்வி முறைமைகளைக் கூறுக.
7. குழந்தைகளின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் மாநாடு-1989 இன் உறுப்புரை-23 இயலாமை உள்ள நபர்களுக்கான விசேட ஏற்பாடுகளை எவ்வாறு வரையறுத்துள்ளது.
8. இலங்கையின் இந்த பொருளாதார நெருக்கடியில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுக்கு கல்வி கற்பதற்காக வீட்டுப் பாடசலை முறைமையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதை சுருக்கமாக விளக்குக.

(8x5 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

i. விசேட பாடசாலைகள், ஒருங்கிணைந்த கல்வி மற்றும் உள்ளடங்கல் கல்வி முறைமைகளின் வேறுபாட்டை உதாரணங்களுடன் விளக்குக.

(09 புள்ளிகள்)

ii. விசேட பாடசாலைகள், விசேட கல்விப் பிரிவு மற்றும் இலங்கையில் உள்ளடங்கல் கல்வி முறைமை ஆகியவற்றின் வெற்றிகரமான நடைமுறைக்குத் தேவையான தொடர்புடைய காரணிகளைப் பற்றி ஆராய்க.

(11 புள்ளிகள்)

10.

i. வழக்கமான மாணவர்கள் விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்களைப் புரிந்துகொள்ளவும் மதிக்கவும், அவர்களுக்குப் பொருத்தமான முறையில் பதிலளிக்கவும் செய்யக்கூடிய சில படிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. பொதுக் கல்வி ஆசிரியர்கள் மற்றும் விசேட கல்வி பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறையில் விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட மாணவர்களுக்கு அன்றாடத் தேவைகளை எவ்வாறு பூர்த்திசெய்ய முடியும் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

11.

i. முறைசாரா கல்வி முறையின் கருத்தை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. டவுண் சிண்ட்ரோம் (Down Syndrome) உள்ள ஒரு மாணவரின் தொழில் கல்வியில் முறைசாரா கல்வி முறைமையை எவ்வாறு செயல்படுத்தலாம்?

(12 புள்ளிகள்)

12.

i. இயலாமை பிள்ளைகளுக்கான விசேட தேவைகள் கல்வியின் விருத்தியை உதாரணங்களை மேற்கோள் காட்டி விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. இலங்கைப் பாடசாலைகளில் இயலாமை உள்ள பிள்ளைகளின் உள்ளடங்கல் கல்வியை மேம்படுத்துவதற்கு நீங்கள் என்ன ஆலோசனைகளை வழங்க முடியும்?

(10 புள்ளிகள்)

13.

i. அனைவருக்கும் கல்விக்கான இலக்குப் பரிமாணங்களை நோக்கி அரசுகள் செயல்படக்கூடிய **ஆறு (06)** பரந்த பரிந்துரைகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. அனைவருக்கும் கல்வியின் மேற்குறிப்பிட்ட இலக்கு பரிமாணங்களை அடைவதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் எந்தளவிற்கு செய்திருக்கிறது என்பதை ஆராய்க.

(14 புள்ளிகள்)

14.

i. விசேட சூழ்நிலைகளில் வைக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் எண்ணக்கருவை உதாரணங்களை மேற்கோள்காட்டி விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. இலங்கையின் கோவிட்-19 தொற்று நிலைமையும் பொருளாதார நெருக்கடியும் விசேட சூழ்நிலையில் உள்ள பிள்ளைகளின் கல்வியை எந்தளவிற்கு பாதித்துள்ளன?

(14 புள்ளிகள்)

*-பதிப்புரிமை பெற்றது-*